O.S No.97/2014 (P.W-1 )

திரு. பிரசாத்குமார்

11.10.2022

பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்கு விசாரணை

1) தாவா சொத்துக்கள் ஆதியில் 15.12.1997 கிரைய ஆவணப்படி பொன்னுசாமி, முருகேஷ், மற்றும் மோகனசுந்தரம் ஆகியோர்களுக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால், சரிதான். அதை அவர்கள் வாங்கியதற்கு பிறகு ஸ்ரீ வெங்கடாஜலபதி என்ற பெயரிட்டு வீட்டு மனையிடங்களாக பிரித்தார்கள் என்று சொன்னால், சரிதான். அதன் பின்பு நான் தாவா சொத்தை யாரிடமிருந்து வாங்கினேன் என்று சொன்னால், மேற்படி நபர்கள் 3 பேரும் ஒரு நடராஜ் என்பவருக்கு அதிகாரம் கொடுத்திருந்தார்கள். நான் கருணாகரன் என்பவரிடமிருந்து 20212 ல் வாங்கினேன். 2001 ல் கருணாகரன் நடராஜனிடமிருந்து வாங்கியுள்ளார். அந்த வீட்டு மனை எண்.47, 48 ஆகும். வீட்டு மனை எண்.47, 48 ன் வீட்டு மனையிடங்களுக்கான அங்கீகார எண்.374 ஆகும். அது 1994 ம் ஆண்டு வீட்டு மனையிட பிரிவுகளாக அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. நான் 7 1/2 செண்ட்டு பூமியை வாங்கினேன். அந்த 7 1/2 செண்ட்டு பூமியும் என் பெயரில் தான் உள்ளது.

2) பிரதிவாதி தாக்கல் செய்துள்ள எதிருரையை நான் படித்து பார்த்தேன் என்றால், சரிதான். 15.12..1997 அன்று ஒரு பொன்னுசாமி, முருகேஷ் மற்றும் ஒரு மோகனசுந்தரம் ஆகியோர், தாவா சொத்துக்களையும், மற்ற சொத்துக்களையும் கிரையம் பெற்றுள்ளார்கள் என்பதும், 19.5.1999 அன்று மேற்படி மூவரும் ஒரு நடராஜ் என்பவருக்கு பொது அதிகாரப்பத்திரம் வழங்கினார்கள் என்பதும், நடராஜ் ஸ்ரீ வெங்கடாஜலபதி நகர் என்னும் பெயரில், வீட்டுமனையிடங்களாக பிரிவினை செய்து இடம் விற்றார் என்று சொன்னால், சரிதான். அவ்வாறு அவர் விற்கும்போது 18.11.2004 அன்று அப்பாச்சி முதலியார் மகன் பழனிசாமி என்பவருக்கு மனை எண்கள்,27, 13, 15, 28, 29, 30, 31, 32, 34, 35, 37, 38, 45 ஆகிய மனையிடங்களை விற்பனை செய்தார் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. பழனிச்சாமியிடமிருந்து பிரதிவாதிகள் மனை எண்கள்.37, 38-ஐ விலைக்கு பெற்றுள்ளார்கள் என்பதை எதிர்வழக்குரையை படித்து பார்த்து தெரிந்துகொண்டேன்.

3) நான் கருணாகரனிடமிருந்து வாங்கிய கிரையம் மோசடியானது என்று சொன்னால், சரியல்ல. நான் பெற்ற கிரைய ஆவணத்தில் மனை அங்கீகார

எண்.374/99 என்று பதிவாகி உள்ள எண் திருவள்ளூர் மாவட்டம், கக்கலூர் கிராமம், தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவன மனை பிரிவுக்கு வழங்கப்பட்ட ஒப்புதல் எண் என்றும், அது போலியானது என்றும் சொன்னால், சரியல்ல. மேற்படி 374/99 ன்படி மனை எண்கள் 47, 48–ஐ விற்பனை செய்தது தவறானது என்று சொன்னால், சரியல்ல. மனை எண் 47, 48–ற்கான உண்மையான அங்கீகார எண் தெரிந்துகொண்டேனா என்றால், பிரதிவாதி சொல்லி தெரிந்துக்கொண்டேன். என்னுடைய ஆவணங்கள் அனைத்தும் 29.07.2022 அன்று மாவட்ட பதிவாளரிடம் பிரதிவாதி மனு கொடுத்து இரத்து செய்துவிட்டார் என்று சொன்னால், அதுபற்றி எனக்கு தெரியாது.

4) ஸ்ரீ வெங்கடாஜலபதி நகருக்கு நகர ஊரமைப்பு இயக்குநர் வழங்கியுள்ள மனையிட அங்கீகார எண்.232/2002 என்று சொன்னால், தற்போது தான் தெரிந்துகொண்டேன். ஸ்ரீ வெங்கடாஜலபதி நகருக்கு கொடுக்கப்பட்ட அங்கீகார எண்.232/2002 ன் அடிப்படையில் பிரதிவாதிகள் மனை எண்கள்.37, 38–ஐ கிரையம் பெற்றுள்ளார்கள் என்றால், பிரதிவாதிகளின் எதிர்வழக்குரையிலிருந்து தெரிந்து கொண்டேன். போலியாக தயாரிக்கப்பட்ட மனை அங்கீகார எண் அடிப்படையில் பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட மனை எண்கள் 37, 38–ஐ மனை எண்கள்.47, 48 ஆக எனக்கு விற்பனை செய்துள்ளார்கள் என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்படி கிரையம் தவறானது என்று தெரிந்துக்கொண்டு, நான் 1ம் பிரதிவாதிக்கு, 1ம் பிரதிவாதியின் வங்கி கணக்கிற்கு ரூ.2,00,000/– அனுப்பினேன் என்றால், பிரதிவாதி கேட்டுக்கொண்டதால் அனுப்பினேன். ஆனால், 1ம் பிரதிவாதி அந்த பணத்தை திருப்பி அனுப்பிவிட்டார். பிரதிவாதிகள், என் மீது இதே நீதிமன்றத்தில் அ.வ.எண்.115/2014 என்ற வழக்கை தொடர்ந்துள்ளார்கள் என்றால், சரிதான். எதிர்வழக்குரை தாக்கல் செய்த பின்னிட்டு, கருணாகரன், நடராஜன் மீது நடவடிக்கை எடுத்துள்ளேனா என்றால், இல்லை. பிரதிவாதிகள் எங்கள் மீது நிலஅபகரிப்பு பிரிவில் புகார் கொடுத்தார் என்றால், சரிதான்.

5) என்னுடைய கிரைய ஆவணங்கள் அனைத்தும் போலியான வீட்டுமனை அங்கீகார எண் 374/99–ன் அடிப்படையில் பெறப்பட்ட கிரைய ஆவணங்கள் என்றும், அந்த ஆவணங்கள் சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களின் அடிப்படையில் பிரதிவாதிகள் மீது தொடர்ந்துள்ள இந்த வழக்கு நிலைக்காது என்றால், சரியல்ல. என்னுடைய சொத்துக்களுக்கு வில்லங்கம் எடுத்துப்பார்த்தேனா என்றால், வழக்கு போட்ட சமயத்தில் எடுத்துப் பார்த்தேன். தற்போது எடுத்துப்பார்க்க வில்லை. தற்போதைய நிலவரப்படி நான் கிரையம் பெற்ற ஆவணங்கள் மற்றும் எனக்கு

முந்தைய ஆவணங்களான கருணாகரன் கிரையம் பெற்ற ஆவணங்களான பத்திர எண்.1267/2001, எனது ஆவணமான 8269/2013 மற்றும் 8270/2013 மற்றும் 9060/2013, 9064/2013 ஆகிய ஆவணங்கள் அனைத்தும் மோசடியான ஆவணம் என்று இரத்து செய்யப்பட்டு, தற்போது எந்த வில்லங்கங்களும் செய்யக்கூடாது என்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பது தெரியுமா என்று கேட்டால், தெரியாது. பிரதிவாதிகள் பெற்ற கிரையம் தான் சட்டப்படி செல்லத்தக்கது என்றும், அவ்மனையிடங்களில் நான் எந்த உரிமையும் கோர முடியாது என்றால், சரியல்ல. அதனால் தாவாவை தள்ளுபடி செய்யப்பட வேண்டுமென்றால், சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் என் முன்னிலையில் அவரது கூற்றுப்படி தட்டச்சு செய்யப்பட்டு, அவருக்கு படித்துக் காண்பிக்கப்பட்டது. சாட்சி சரி என ஒப்புக் கொண்டு கையொப்பமிட்டார்.

(ஒம்) எஸ்.வடிவேல்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
அவிநாசி.